ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1904/44 - 2015 මාර්තු මස 04 වැනි බදාදා - 2015.03.04

*1904/44 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

LA/*2306*

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையின் மஹாஓயா நீர் வழங்கல் கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் பொரபொலை விகாரை காணிக்கு குறுக்காக நீர் குழாய்கள் பதிப்பதற்கு காணித்துண்டொன்றின் வசதியுரிமையை கொள்வதற்கு தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்*
*வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*“லக்திய மெதுர”,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2015, பெப்புருவரி 24.*
*5/2/2/1074*

**அட்டவணை**

அம்பாறை மாவட்டத்தில், மஹாஓயா பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 136/ஏ/1, பொரபொலை கிராம அலுவலர் பிரிவின் பொரபொலை கிராமத்தில் அமைந்துள்ள பொரபொலை பன்சல்வத்த எனும் காணியை காட்டப்படுகின்ற அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. ஜீ. அபேகுணவர்த்தன அவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட 2014 / W 1 வரைவின் துண்டு இலக்கம் 2 என காட்டப்படும் மொத்த அளவில் இருந்து சுமார் 3.92 பேர்ச்சஸ் மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

| | | |
|---|---|---|
| வடக்கு | : | 1 ஆம் துண்டு இலக்க காணி ; |
| கிழக்கு | : | இந்த காணியின் மீதித்துண்டு ; |
| தெற்கு | : | இந்த காணியின் மீதித் துண்டு மற்றும் மஹாஓயாவில் இருந்து அம்பாறை திசைக்கு போகும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) ; |
| மேற்கு | : | இந்த காணியின் மீதித்துண்டு. |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: விஹாராதிபதி,
ஸ்ரீ ஸாக்கியசிங்காராமை,
பொரபொலை,
மஹாஓயா.

*3- 581*

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கண்டி - வடக்கு பாதத்தும்பர ஒன்றிணைந்த நீர்வழங்கல் திட்டத்தின் விலான - உடகம சேவை நீர்த்தேக்கத்தை பிரவேசிக்கும் வழி, நீர்க்குழாய் அமைத்தல் மற்றும் பராமரிப்பதற்காக காணித்துண்டொன்று தேவைப்படுவதால் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
“லக்திய மெதுர”,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2015, பெப்புருவரி 24.*
*5/2/1/1076.*

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவில், விலான - உடகம கிராம அலுவலர் பிரிவில், விலான - உடகம கிராமத்திலமைந்த, “ஹபுகொள்ள தோட்டம்” என்னும் காணியில், சுமார் 21 பேர்ச்சஸ் முழு அளவிலான கீழ் காணும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு :-

காணியின் பெயர் : ஹபுகொள்ள தோட்டம் ;
விஸ்தீரணம் : 21 பேர்ச்சஸ்.

எல்லைகள் :-

வடக்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : அலவத்துகொட - அங்கும்புர பிரதான பாதை (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் இக்காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : இக்காணியின் எஞ்சிய பகுதி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : 1. வரையறுக்கப்பட்ட இன்டர் எக்ரோ லங்கா,
(ஜே. வி. தனியார்),
ஹப்புகொள்ள வத்த,
விலானகம,
(கண்டி ஊடாக).

*3- 582*

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையின் ஊவா பரணகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் லூணுவத்த நீர் சுத்திகரிப்பு அலகொன்றை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமைச் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 24.
5/2/1/1080.

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில், ஊவா - பரணகம பிரதேச செயலகப் பிரிவில், இல. 41/B, லூணுவத்தை கிராம அலுவலர் பிரிவின் லூணுவத்தை ஹியுகொலன்ட் வத்த - பட்டியகும்புரகம கிராமத்தில் அமைந்துள்ள ஹியுகொலன்ட் வத்த - லூணுவத்த எனும் பிரிவு எனும் காணியின் மொத்த அளவில் இருந்து சுமார் 40 பேர்ச்சஸ் மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளினுள் இருக்கும் காணித்துண்டு :-

வடக்கு : தேயிலைத் தோட்டம் ;
கிழக்கு : தேயிலைத் தோட்டம் ;
தெற்கு : தேயிலைத் தோட்டம் ;
மேற்கு : நீர் வழங்கல் சபையின் காணி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : 1. பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்,
வ/ப மல்வத்தை பெருந்தோட்ட கம்பனி,
இல. 280,
வேல்ல வீதி,
கொழும்பு 12.

3- 583

---

MP/2410

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச் சபைக்கு யாழ்ப்பாணம்- கிளிநொச்சி சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு திட்டத்தின் கீழ் நெடுந்தீவு

(Delft) நீர் கோபுரத்தை நிர்மாணித்தல் பொருட்டு காணித்துண்டொன்றை கைப்பற்றிக் கொள்வதற்கு தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக்கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 24.
5/2/2 1096.

**அட்டவணை**

யாழ்ப்பாண மாவட்டத்தில், நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில், இல. J/ 4, நெடுந்தீவு, மத்திய கிராம அலுவலர் பிரிவில் தெருக்கடி நெடுந்தீவு கிராமத்தில் அமைந்துள்ள சின்னவன் தோம்பு எனும் காணியில் காட்டப்படுகின்ற மொத்த அளவில் இருந்து சுமார் 20 பேர்ச்சஸ் ஆகின்ற பின்வரும் எல்லைகளினுள் இருக்கும் காணித்துண்டு :-

வடக்கு : திரு. குமாரவேலு தர்மலிங்கம், திரு. அருள்சீலன் மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் காணி ;
கிழக்கு : திரு. தோமஸ் அந்தோனிதாஸ் மற்றும் இன்னும் சிலர் உரிமைக்கோரும் காணி ;
தெற்கு : குறுக்கு வழி ;
மேற்கு : வீதி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : 1. திரு. பீ. கருணாரத்ன,
பிரிவு இல. 10,
தெருக்கடி,
நெடுந்தீவு.

3-584

---

LA/1885

**திருத்தம்**

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், 2011.12.06 ஆந் திகதிய 1735/9 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் 2 A மற்றும் 3 A பக்கங்களில் 12-761 ஆம் இலக்கத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் அட்டவணையில் "துண்டு இலக்கம் 6 இன் அளவு 0.0015 ஹெக்டெயார்" என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதன் அளவு "0.0016 ஹெக்டெயார்" என திருத்தப்பட்டதாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 24.
5/2/1/946.

3-585

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.